மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக, பெருநகர், பெருநகர் காலனி, பெருநகர் நடுக் காலனி, பெருநகர் மேட்டுக் காலனி, மானாம்பதி, சேத்துப்பட்டு, மேட்டூர் காலனி ஆகிய 7 பகுதிகள்—ஏறக்குறைய 4,820 குடியிருப்புகளைக் கொண்ட பகுதிகள்—பயன் அடைகின்றன. அதோடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டி 38 பொதுக் குழாய்கள் மூலமாக, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நிலையில், இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கான செயற்குறிப்புகள் ஏதும் இல்லை.

திரு. க. நரசிம்மபல்லவன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 காலனிகளில், குறிப்பாக நடுக் காலனியில் மட்டும்தான் சரியான முறையில் தண்ணீர் தரப்படுகிறது. எஞ்சிய இரண்டு காலனிகளுக்குத் தண்ணீர் தரப்படவில்லையென்ற சூழ்நிலையில் தயவுசெய்து அந்த இரண்டு காலனிகளுக்கும் தண்ணீர் தரும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(திருவாளர்கள் குமரி அனந்தன் மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியோர் அவைக்குள் நுழைந்தபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மேசையைத் தட்டினர்).

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நடுக் காலனிக்குத் தண்ணீர் கொடுத்ததற்காக திரு. சித்தன் அவர்கள் மேசையைத் தட்டியதற்கு நன்றி. (சிரிப்பு) திருமங்கலத்துக் காரருக்கு நடுக் காலனிக்குத் தண்ணீர் கொடுப்பதிலே என்ன மகிழ்ச்சி என்று எனக்குத் தெரியவில்லை. சொல்ல வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேடசந்தூர் தாலுக்காவில் தக்காளி தொழிற்சாலை ஆரம்பித்தல்.

219—*வினா எண் 10205) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவில் தக்காளி சாறு மற்றும் தக்காளியில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களுக்கான தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1987 மார்ச் 28]

மாண்புமிகு திரு க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை; (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளிப் பழச் சாறுக்கு வெளிநாடுகளில் ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. கிசான் போன்ற தனிப்பட்ட நிறுவனங்கள் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து பெரிய அளவில் லாபத்தைச் சம்பாதிக்கிற சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தில் குறிப்பாக அண்ணா மாவட்டத்தில் ஏராளமான இடங்களில் தக்காளி விளைவிக்கப்படுகிறது. உண்மையிலேயே அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமானால் அதன் மூலமாக அரசுக்குப் பெரிய அளவில் லாபம் கொடுக்கிற தொழிற்சாலையாக அது இருக்கும். அதே சமயத்தில் விவசாயிகளுக்கும் உதவுகின்ற தொழிற்சாலையாகவும் அது இருக்கும். 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டு—தனிப்பட்டவர்கள் பெரிய அளவிலே லாபம் ஈட்டுவதால் வெளிநாடுகளில் நிறைய மார்க்கெட் இருக்கிற—இந்தத் தொழிற்சாலையை இனிமேலாவது அந்தப் பகுதியிலோ அல்லது வேறு எங்காவதோ ஆரம்பிப்பதற்கு அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி அந்தப் பகுதியிலே மட்டுமல்லாது மற்ற எல்லாப் பகுதிகளிலும் நிறையக் கிடைக்கிறது. ஆகவே வேளாண் தொழிற் கழகம் தக்காளி பழச்சாறு உற்பத்தித் தொழிற்சாலையை வெளிநாட்டுக் கூட்டுறவோடு உருவாக்கி அதன் மூலம் வெளிநாட்டுச் சந்தையைப்பெற இயலுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.